முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No. 250 /2018

27.01.2026 வா.சா.1 திரு. மந்திரமூர்த்தி

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது தந்தை பெயருக்கு தாவா சொத்தை விற்பனை செய்த முன் பாஸ்தியர் சுந்தர நாடார் என்பவர் பெயரில் கிரைய ஆவணமோ அல்லது வருவாய் துறை ஆவணமோ உள்ளதா என்றால் கிரைய ஆவணம் இல்லை பட்டா மட்டும் உள்ளது. மேற்படி பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான புலவரைபடம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. எனது தந்தை பெயரில் தான் தபசில் சொத்திற்கான கட்டிட வரைபட அனுமதி உத்தரவு உள்ளது. கட்டிட வரைபடம் அனுமதி உத்தரவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவசியம் ஏற்பட்டால் தாக்கல் செய்கிறேன்.
2. தாவா சொத்தின் புல வரைபடம் எனது அப்பா பெயரில் உள்ளதை தான் நான் வைத்துள்ளேன்.சுந்தர நாடார் என்பவருக்கு தபசில் சொத்தானது கிரையம் மூலம் பாத்தியமானதா என்றால் பட்டா மூலம் பாத்தியமானது. எனது தந்தை பெயரில் உள்ள தபசில் சொத்தின் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தந்தை பெயரில் பட்டாவே மாறுதல் ஏற்படவில்லை. தபசில் சொத்து குறித்து எந்த பட்டாவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.
3. 2-வது தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது என்பதை நிருபிக்க நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ.1 ஐ வைத்துள்ளேன். 2-வது தபசில் சொத்து ஸ்தலத்தில் இல்லை என பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்து உள்ளதார்கள் என்றால் சரிதான். ஸ்தலத்தில் 2-வது தபசில் இருக்கிறது

என்பதற்கு நான் எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. 3–வது தபசில் குறிப்பிட்டுள்ள கட்டுமானங்கள் எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது என்பதை நிருபிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஸ்தலத்தில் இல்லாத 2–வது தபசில் சொத்தில் 3–வது தபசில் இருப்பதாக சொல்வது தவறு என்று பிரதிவாதிகள் கட்சி செய்கிறார்கள் என்றால் சரிதான் ஆனால் மேற்படி சங்கதி உண்மையானது அல்ல. பிரதிவாதிகள் எடுத்துள்ள மேற்படி கட்சியானது தவறு என்பதை நிருபிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் மேலும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றம் மூலம் வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
5. எனது தகப்பனார் பெயரில் உள்ள அசல் கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் வங்கியில் உள்ளது. வங்கியில் மேற்படி ஆவணம் இருந்தாலும் வங்கியில் இருந்து வரவழைத்து சான்றிட்ட ஆவணத்தை குறியீடு செய்யலாம் என்று சொன்னால் சரிதான். எந்த வங்கியில் மேற்படி ஆவணம் உள்ளது என்பதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் உள்ள அசல் ஆவணத்துடன் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரைபடமானது எனது சொத்தின் அமைப்பை காட்டக்கூடியது என்று சொன்னால் சரிதான்.
6. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு எதிராக கேவியேட் மனு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி கேவியேட் மனுவில் 3–வது தபசில் சொத்தை பொறுத்து எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் பிரதிவாதிகளுக்கு எதிராக கேவியேட் மனு தாக்கல் செய்த போது

பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு (அசல்) **பிவாசாஆ.1**. மேற்படி கேவியேட் மனுவில் தபசில் 2–வது சொத்தானது பொது நடைபாதை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கேவியேட் மனுவில் 2–வது தபசில் சொத்தாக குறிப்பிட்டுள்ள சொத்து நான் இந்த வழக்கின் 2–வது தபசில் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் பின்னர் பிராதை சீர்திருத்தம் செய்வதற்கு மனு தாக்கல் செய்து 2–வது தபசில் சொத்து பற்றிய விவரம் மாற்றப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த பின்னர் எவ்வளவு வருடம் கழித்து சீர்திருத்த மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

7. நான் வழக்கறிஞராக பணியாற்றி வருவதால் எனது வழக்கை எவ்வளவு கவனமாக தாக்கல் செய்வேன் என்று எனக்கு நன்கு தெரியும் என்றால் வழக்கு சொத்து என்னுடையது என்பதால் பதற்றத்தினால் தவறுதலாக தாக்கல் செய்து விட்டேன். 2–வது தபசில் சொத்து எனக்கு இல்லை என்றும் அதனால் தான் மேற்படி சொத்தை அபகரிக்கவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.
8. அசல் வழக்கு எண். 254/2018 ஐ வழக்கிலும் தபசில் சொத்தை பொறுத்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பிரதிவாதி தரப்பில் 1வது சாட்சியாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 27.01.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.01.27 17:18:03 +0530

Principal District Munsif,
Tirunelveli.